REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 31உ திங்கள் (16—9—57) ★ ★ வெளியீடு: புரட்டாசி 1உ செவ்வாய் (17—9—57) [இதழ் 80

## சேலத்தில் தேனிரும்புத் தொழிற்சாலை

சேலம், செப். 16—

சேலத்தில் தேனிரும்புத் தொழிற்சாலை துவக்க சென்னை சுந்தரராசன் கம்பெனிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றும், இப்போது கட்டாக்கில் உள்ள கலிங்கா தொழில் நிலையத்திற்கும், சேலத்தில் தேனிரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். வி. இராமசாமிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'தமிழர் எழுச்சி பெறச் செய்தவர் மறைமலையடிகள்'

## 'வடக்கிலிருந்து வரும் வாடையை வந்தவழி ஓட்டுதல் வேண்டும்'

### 'இனி எந்த நாட்டு மொழியும் இந்நாட்டில் படையெடுக்க முடியாது'

### 'தமிழ், பாரத நாட்டிற்கே பொது மொழியாகும் ஆற்றல்படைத்தது'

### 'தமிழ் நாட்டில் நல்ல தமிழ் வழங்கச் செய்வது தவறு?'

*மறைமலையடிகளார் நினைவு விழாவில் டாக்டர் சேதுப்பிள்ளை சங்கநாதம்*

சென்னை, செப் 16—

"இனி எந்த நாட்டு மொழியும் இந்த நாட்டில் படையெடுக்க முடியாது; தமிழ்தான் தமிழ்நாட்டிற்குரிய மொழி; தமிழ்நாட்டில் மட்டுமல்ல—பாரத நாட்டுக்கும் பொதுமொழியாக இருக்கக்கூடிய தன்மையும் தொன்மையும் படைத்தது தமிழ்மொழி ஒன்றுதான்.

"இதை நாம் மட்டும் சொல்லவில்லை. பாரதியாரே, 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் தழைக்கச் செய்வோம்,' என்று கூறியிருக்கிறார். பாரதியார் வழிநின்று சொல்லுகிறோம்—தமிழையே பாரதநாடு முழுவதிலும் பொதுமொழியாக்க வேண்டும்.

"நமக்கு இன்று நல்ல காலம் வந்துவிட்டது. இந்த பல கட்சிக்காரர்களும் ஒருங்கே கூடியிருக்கின்றனர். வேற்றுமைகளையெல்லாம் மறக்கச்செய்து அனைவரையும் ஒன்றுகூட்டுவிக்கும் ஆற்றல் தமிழ்மொழி ஒன்றிற்குத்தான் உண்டு. இங்கு கூடியுள்ள அனைவரும் ஒருமுகமான கருத்தையே கொண்டிருக்கின்றனர். இந்தக் கூட்டத்திலே நாம் தெரிவிக்கும் ஒருமுகமான கருத்தை—அதன் உண்மையை ஆட்சியாளர்கள் அறிவார்களேயானால், நாளையே நம் எண்ணம் நிறைவேறிவிட வேண்டும்."

*—இவ்வாறு, நேற்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற மறைமலையடிகளார் ஏழாம் ஆண்டு நினைவு விழாவில், பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் உணர்ச்சி ததும்பக் குறிப்பிட்டார்கள்.*

*அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—*

"வடநாட்டு வாடையைத் தடுத்து நின்றவர் நம் மறைமலையடிகள். அந்த வடநாட்டு வாடை தமிழ்நாட்டில் புக முடியா வண்ணம், வேங்கட மலை தடுத்தது; தணிகை மலை தடுத்தது. அவற்றையும் கடந்து உள்ளே நுழைந்த வாடையை 'மறைமலை' தடுத்தது. பல்லாவரத்திலிருந்து அந்த மலை தடுத்ததனால்தான் எங்கள் நெல்லை நாட்டிலே ஓரளவு நல்ல தமிழைப் பாதுகாக்க முடிந்தது.

"வடக்கிலிருந்து வருகின்ற வாடையை வந்தவழி ஓட்டுதல் வேண்டும். அதற்குத் தமிழர்கள் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

*"இத்தகைய பேரிடர்கள் பல திசைகளில் இருந்தும் வரும்போது அவற்றைத் தடுத்து நிறுத்த மறைமலை இல்லையே என்று எண்ண வேண்டியுள்ளது. எனினும் அவர் எழுப்பிவிட்டுச் சென்ற உணர்ச்சி மாறாது. தமிழ் மொழிக்கு வரும் இடர்களைத் தடுத்தே தீருவோம்.*

*"வேதாசலம் என்ற வடமொழிப் பெயரை, 'மறைமலையடிகள்' என்று மாற்றிக்கொண்டதைக்கண்டு, பலர் உடலெரியும், உள்ள எரிவும் கொண்டனர். பழந்தமிழ்ப் பெயரான 'முதுகுன்றம்' என்பதை, 'விருத்தாசலம்' என்று மாற்றினார்கள்; 'குடமூக்கு' என்னும் அழகிய பெயரை, 'கும்பகோணம்' என்று மாற்றி அதற்குரிய குணங்களையும் கற்பித்தார்கள்; 'மறைக்காடு' என்பதை 'வேதாரண்யம்' என்றாக்கினார்கள். இப்படிப்பட்ட அருந்தமிழ்ப் பெயர்களையெல்லாம் மாற்றியது கண்டு ஆத்திரப்படாதவர்கள், 'வேதாசலம்' என்ற வடமொழிப் பெயரை 'மறைமலை' என்று மாற்றியது கண்டு உள்ளெரிவும் உடலெரிவும் கொள்வானேன்? தன் பெயர் அழகிய தமிழில் இருக்கவேண்டும் என்பது குற்றமா? தமிழ் நாட்டில், தமிழர்களின் பெயர்கள் தமிழில் இருக்கவிழைவது குற்றமா?*

*"நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்—இனி இந்த நாட்டிலே பிறக்கின்ற பிள்ளைகளுக்கெல்லாம் நல்ல தமிழ்ப் பெயர்களையே வையுங்கள்; நல்ல தமிழ் வேண்டுமென்றால் மறைமலையடிகளின் நூல்களைப் படியுங்கள்; அவற்றிலே தேமதுரத் தமிழோசை முழங்கும்.*

*"மறைமலையடிகளார் வாழ்ந்த இடத்துக்குப் 'பல்லவபுரம்' என்று பெயர்' அது நாளடைவில், 'பல்லாவரம்' என மருவிவிட்டது. அந்தப் பல்லவபுரத்திலே அடிகளாரின் பெயரால் ஓர் தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளார்கள். அந்த இடத்திலே வெறும் தமிழ்க் கல்லூரி மட்டும் ஏற்படுத்துவது போதாது; ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமே தோற்றுவிக்க வேண்டும் என்பது என் பேரவா."*

*"மறைமலையடிகளார் ஓர்*

## மறைமலையடிகளின் பெயரால் தமிழ்க் கல்லூரி

### பல்லாவரத்தில் நிறுவப்படும்

சென்னை, செப். 16—

மறைமலையடிகளாரின் நினைவாக, அடிகளார் வாழ்ந்த பல்லாவரத்தில் ஓர் தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தப்படவிருக்கிறது.

*இக்கல்லூரியை நிறுவுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. இலட்சுமணசாமி (முதலியார்), சென்னைத் தியாகராயர் கல்லூரி முதல்வர் திரு. எம். கே. சண்முகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகச் செயலாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை ஆகியோர் இன்று மாலை பல்லாவரத்துக்குச் சென்று இடத்தைப் பார்வையிடுவார்கள்.*

மற்றும், மறைமலையடிகளார் சேகரித்து வைத்திருந்த 4,000-க்கு மேற்பட்ட அரிய பல நூற்களைக் கொண்டு ஓர் தமிழ் ஆராய்ச்சி நூலகம் ஏற்படுத்தப்படும். இந்நூலகத்திற்கான கட்டிடம் சென்னை-லிங்கிச் செட்டித் தெருவில் வாங்கப்பட்டுள்ளது.

*இத்தகவலை, நேற்று நடைபெற்ற மறைமலையடிகள் நினைவு விழாவில், மறைமலையடிகளின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசிய திரு. எம். கே. சண்முகம் தெரிவித்தார்.*

*இவ்விழா, சென்னை-மவுண்ட் ரோடு இராஜாஜி மண்டபத்தில் நேற்று மாலை 4-மணிக்கு நடைபெற்றது.*

*நகர மேயர் திரு. கே. என். சீனிவாசன் தலைமை வகித்தார்.*

*மண்டபத்தின் உள்ளும் வெளியிலும் ஏராளமான மக்கள் குழுமியிருந்து, சிறப்பித்தனர்.*

*தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், பேராசிரியர்கள் ரா. பி. சேதுப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், இளவழகனார், மயிலை-சிவ. முத்து, அ. க. நவநீதகிருட்டினபிள்ளை ஆகியோர், அடிகளாரின் அறிவாற்றலையும் அரிய தொண்டுகளையும் குறிப்பிட்டுப் பேசினர்.*

*இறுதியாக, தென் இந்திய தமிழ்ச் சங்க ஆட்சியாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை அனைவருக்கும் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.*

## 'தமிழுடன் மோதவரும் மொழிகளைப் பிடித்துத் தள்ளுவோம்'

### 'தமிழ் நாட்டில் தமிழ் வழங்கச் செய்வோம்'

மறைமலையடிகள் நினைவு விழாவில் பொதுச்செயலாளர்

### நெடுஞ்செழியன் உரிமை முழக்கம்

சென்னை, செப். 16—

"பிற மொழி இருக்க வேண்டிய இடத்தில் தமிழ் இருக்கவேண்டும் என்று நாம் கூறவில்லை.

"தமிழ் இருக்கவேண்டிய இடத்தில்—இருக்கக்கூடிய இடத்தில் இன்னொரு மொழிவந்து ஏறிக்கொண்டு இருக்குமேயானால், அதை, 'சீ... கீழே இறங்கு' என்று சொல்வோம்.

"அந்தந்த நாட்டில் அந்தந்த நாட்டு மொழியே ஆட்சிபுரிய வேண்டும் என்றுதான் நாம் கூறுகிறோம். இப்படிச் சொல்லுவதனால், பிறமொழி இடத்திலே நமக்கு வெறுப்பு என்று பொருளில்லை. நம் மொழி இருக்கவேண்டிய இடத்தில் வேற்று மொழி புகும்போதுதான் அதைக் கண்டிக்கிறோம்.

"நீக்ரோவர் மொழியை வெறுக்கிறோமா? சீனன் ஒருவன் இங்கு வந்து சீன மொழியில் பேசினால் அவனை வெறுக்கிறோமா? ஆப்பிரிக்கர் பேசும் மொழியை நாங்கள் அவமதிக்கின்றோமா? அந்த மொழிகளெல்லாம் ஒழிக என்று கூறுகிறோம்? அவற்றினிடம் வெறுப்பா காட்டுகிறோம்? தன் தாய்மொழி வாழ வேண்டும்—வளர வேண்டும் என ஆசைப்படுகிறான் தமிழன்.

"ஒருவன், தானே விரும்பி பல மொழிகளைக் கற்கலாம். பல மொழிகளைக் கற்றுத் தன் அறிவைப் பெருக்கிக்கொள்ளலாம்; ஆனால், தன் நேரம், நினைப்பு, உழைப்பு, அறிவு, ஆற்றல், பொருள் அனைத்தையும் செலவிட்டு பல மொழிகளைக் கற்றுத்தான் தீர வேண்டும் என்ற கட்டாயம் இருக்கக்கூடாது.

"தன் தாய்மொழியினிடத்து பிற மொழி மோத வரும்போது அதைப் பிடித்துத் தள்ளவேண்டியது அவசியமாகும்."

*—இவ்வாறு, நேற்று நடந்த மறைமலையடிகளார் நினைவு விழாவில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.*

*அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—*

*"மறைமலையடிகள் மூட்டிய கனல் திக்கெட்டும் பரவியிருப்பதைக் காண்கிறோம்; அவர் ஊட்டிய உணர்ச்சி நல்லவர்கள் இல்லங்களிலெல்லாம்— உள்ளங்களிலெல்லாம் பரக்கக் காண்கின்றோம்.*

*"இந்த நாட்டிலே எவ்வளவோ பெரியார்கள் தோன்றினார்கள்; தோன்றுகிறார்கள். ஆனால், ஒருசிலர்தான் சாகா தலைமுறையாகத் திகழ்கிறார்கள். அந்த தனித் தமிழன்—பச்சைத் தமிழன். அந்த மறைமலை மறைந்துவிடவில்லை. தமிழர்களின் உள்ளங்களிலெல்லாம் அவர் குடிகொண்டிருக்கிறார். அவர் எழுதும் தமிழிலே இன்பம் கண்டோம். அவரது பேச்சிலே தமிழின் சீர்மை கண்டோம்.*

*ஆங்கில மோகம் பெருகியிருந்த அந்தக் காலத்தில் தமிழிலும் அழகாக, அழுத்தமாக சிந்தனையைக் கிளறும் வகையில் பேசமுடியும் என்பதை நிலைநாட்டியவர் மறைமலையடிகளாவார்."*

*சாகாத் தலைமுறையைச் சேர்ந்தவர்தான் மறைமலையடிகள். நாட்டிலே நல்ல தமிழ் நடமாடச் செய்தவர் அவர்; அழகுத் தமிழ் விளங்கச் செய்தவர் அவர்.*

*"'முற்காலத் தமிழ்ப் புலவர்களும் தற்கால தமிழ்ப் புலவர்களும்' என்ற நூலை அவர் எழுதியிருக்கிறார். அதில் அவர் 'பல புலவர்கள், பஞ்சம், பசி, பட்டினி, வறுமை காரணமாக வளைந்து, நெளிந்து, பணிந்து கொடுத்து, கொள்கையை விட்டுவிட்டார்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.*

*"ஆனால் நம் மறைமலையடிகள், யாருக்கும் அஞ்சாமல், வளைந்து நெளிந்து கொடுக்காமல், இழித்[illegible]ம் பழித்தும் கூறுபவர்களைக் க[illegible]டு சிறிதும் பின்வாங்காமல், புல[illegible]களுக்கெல்லாம் எடுத்துக் காட்ட[illegible]க-வழிகாட்டியாக விளங்கியவ[illegible] 'வேதாசலம்' என்னும் பெய[illegible] நீக்கி, தன் செவிக்கும், தன்னை[illegible]ப்பிடுவோர் நாவுக்கும் இனிமை [illegible] சொல்லால், [illegible] வைத்துக்கொண்ட....*

(4-ம் பக்கம் பார்க்க)

# நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 16—9—57 திங்கள்


# முதல் வெற்றி!

இழந்த உரிமையை மீண்டும் பெறுவதற்காக அறப்போர்க் களம் அமைத்தனர் நங்கவரம் உழவர் பெருமக்கள்.

உழவர்கள் நல்வாழ்விற்கென, எதிர்கால பாதுகாப்பிற்கென, சென்னை அரசாங்கம் செயல் முறைக்குக் கொண்டுவந்த சட்டங்கள் இரண்டும், நங்கவரம் விவசாயிகளைத் தொல்லைக்கு ஆளாக்கிவிட்டன.

ஏழை உழவர்களை உழு நிலத்தைவிட்டு வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கென, சென்னை அரசாங்கம் உருவாக்கிய சட்டம், நங்கவரம் உழவர்களை வெளியேற்றுவதற்குப் பயன்பட்டுவிட்டது. சட்டத்தின் வாசகத்தை அவ்வளவு திறமையாகவும் தெளிவாகவும் அமைத்திருந்தது அரசாங்கம். அவ்வாசக அமைப்பைத் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு, தம்மிடம் பல்லாண்டு காலமாக மாட்டு ஏர்—கை ஏர் வாரதாரர்களாகப் பணிபுரிந்து வந்த உழவர்களை வெளியேற்றி விரட்டிவிட்டன நங்கவரமும், அதைச் சுற்றியுள்ள சிற்றூர்களின் பண்ணைகளும்.

உழவர்களின் வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் சட்டம் போட்ட அரசாங்கம், சட்டத்தில் உள்ள குறைபாட்டின் காரணமாக உழவர்கள் அவதிக்குள்ளாக்கப்பட்டு வருவதைத் தாமாகத் தடுக்க முன்வந்திருக்க வேண்டியதுதான் முறையாகும்-எவரும் எதிர்பார்க்கக்கூடியதுமாகும்.

ஆனால் அரசாங்கமோ, ஏனோ—தானோ என இருந்துவிட்டது. உழவர்கள்படும் அவதி குறித்து அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை. அதைத் துடைக்க வேண்டுமே என்ற நல்லெண்ணம் இல்லை.

காலம் தாழ்த்தி வந்தது அரசாங்கம்; வேதனை வளர்ந்து வந்தது, நங்கவரம் உழவர்களுக்கு.

பண்ணையார்களின் பழிவாங்கல், அரசாங்கத்தின் அலட்சியம், 'தமது குறைகளைத் தாமே போக்கிக்கொள்ள வேண்டும்' என்ற முடிவில் நங்கவரம் உழவர்களைக்கொண்டு நிறுத்தின.

நமது கழகத்தின் துணை அங்கமான உழவர் முன்னேற்ற சங்கம், நங்கவரம் உழவர்களுக்கு வழிகாட்ட முன்வந்தது. அப்பகுதி சட்டமன்ற உறுப்பினரான இளவல் கருணாநிதி, உழவர் பெருமக்களுக்குத் தாம் ஆற்றவேண்டிய கடமையை ஆற்ற உவப்புடன் ஒப்பினர்.

சட்டமன்ற உறுப்பினரின் ஒப்புதலையும், ஒத்துழைப்பையும் பெற்ற உழவர் முன்னேற்ற சங்கச் செயல்வீரர்களான முத்துகிருட்டினனும் முத்துவும், மாவட்டச் செ[illegible]லாளரான அன்பில் தர்ம[illegible]கமும், நங்கவரம் உழவர்[illegible]ரின் கருத்தறிந்து, பொ[illegible] செயலாளரின் ஒப்புதல்[illegible]ற்று, அறப்போர் துவங்[illegible]தற்கான [illegible] [illegible]றைகளையும் [illegible] [illegible]ரசாங்கத்திற்கும் அறிவித்தனர்.

இதற்கிடையில் நங்கவரம் உழவர்களுக்கும்— பண்ணையார்களுக்கும் இடையில் சமரசம் காணப் போவதாகக் காங்கிரசு அமைச்சரவை அரசியல் கூத்து ஆடிற்று.

கூத்து, இறுதியில் கூத்தாகவே முடிவுற்றது. பண்ணையார்கள் பிடிவாதமாக இருந்துவிட்டனர். அறப்போருக்கு உழவர்கள் துணிந்துவிட்டனர்.

அரசாங்கப் பாதுகாப்புப் படையினரின் பக்கத்துணை பண்ணையார்களுக்கே உண்டு என அரசாங்கம் பறையறைந்துவிட்டது; படையும் நங்கவரம் பகுதியில் குவிக்கப்பட்டது.

பண்ணையார் — பாதுகாப்புப் படை என்ற இருமுனைகளிலிருந்து மட்டுமே நங்கவரம் உழவர்களுக்கு எதிர்ப்பு முளைக்கவில்லை.

போர் துவக்கநாள் சம்பவத்தை 'போராட்டம் பிசுபிசுத்துவிட்டது' எனத் தலைப்பிட்டு, தவறான செய்திகளையும், வெறும் கற்பனைச் செய்திகளையும் நாட்டு மக்களுக்குத் தந்தன தேசிய ஏடுகள்.

உண்மையை மறைத்தல், புதுக் கதை புனைதல், மிகைப்படக் கூறல், பழிச் சுமத்தல் போன்ற பிரச்சார திருத்தொண்டைத் தேசிய ஏடுகள், ஒவ்வொரு நாளும் திறம்படச் செய்துவந்தன.

அவ்வழியே காங்கிரசு அமைச்சர்களும், தங்கள் நாவைப் பயன்படுத்திவந்தனர்.

தாங்கள் உருவாக்கிய சட்டம் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டுப் போனதையும், அதனால் தங்கள் அறிவுடைமைக்குக் களங்கம் ஏற்பட்டு இருப்பதையும், உழவர்கள் நொந்துக்கிடப்பதையும் எண்ணி எண்ணி, வெட்கத்தாலும் துக்கத்தாலும் கண்கலங்கிக் கழுவாய் தேடவேண்டிய காங்கிரசு அமைச்சர்களோ, நாடுசுற்றி வந்தனர்— நலமற்ற சொற்களை உமிழ்ந்து வந்தனர்.

நங்கவரம் உழவர்களின் வீரப்போரை, உழவர்களின் வெட்டி வேலை—கழகத்தின் விளம்பரத் திருப்பணி—என்றெல்லாம் கூறி, காங்கிரசு அமைச்சர்கள் தங்கள் சொந்த வரலாற்றைப் பொதுமக்களுக்கு விளக்கிவந்தனர்.

இவ்வளவும் கிடக்க, உழவர்—தொழிலாளரிடை தொழில் நடத்திவரும் அரசியல் கட்சியினரோ, அணுவைத் துளைத்திடும் அற்புதம் எனக் கருதி, நங்கவரம் போராட்டத்தை மட்டுந்தான் முன்னேற்றக் கழகம் நடத்திவருகிறது என்று, தம் இயல்பை எடுத்தோதி வந்தனர்.

இவ்வளவு எதிர்ப்புகள் இருந்தும், அவ்வெதிர்ப்புகளை முறியடித்துக்கொண்டு, முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதிபோல், வெற்றி—முழு வெற்றி நங்கவரம் உழவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

அவ்வெற்றி, நங்கவரம் உழவர்களுக்கு நலம் பயப்பதுடன் இருந்துவிடாது.

அவ்வெற்றிக்கு மூலமான உடன்பாட்டை அடிப்படையாகக்கொண்டு, அப்பகுதியில் உள்ள உழவர்களின் தொல்லைகள் நீக்கப்படும் என்பது முக்காலும் உறுதி.

உழவர் போராட்டத்தில், ஆளவந்தார்களும், அரசியல் தொழில் நடத்தும் கட்சியினரும் கூறிவருவதுபோல், அதிகப் பயிற்சி பெற்றில்லாத நமது முன்னேற்றக் கழகத்தவர் முன்னின்று நடத்திய அறப்போர், எடுத்த எடுப்பிலேயே வெற்றி—குறிப்பிடத்தகுந்த வெற்றி பெற்றிருக்கிறது என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி தரக்கூடியது—மாற்றார்களுக்கு மருட்சி தரக்கூடியது.

உழவர் போராட்டங்களில் ஊறிப்போய் இருப்பவர்கள், வெட்கித் தலைகுனியத்தக்க நிலையில், நங்கவரத்தில் நமது உழவர் முன்னேற்றச் சங்கத்தினர் மகத்தான வெற்றி கண்டுள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் வீசிய ஏசல்—மூட்டிய எரிச்சல்—அச்சுறுத்தல்—கண்ணீர்ப் புகை—தடியடி—பண்ணையார்களின் வஞ்சம்—ஆளவந்தார்களின் அலட்சியம்—மாற்றுக் கட்சியினரின் மாய்மாலப் பேச்சு—கருங்காலிகளின் துரோகம்—ஆகிய அனைத்தையும் பொருட்டாக மதிக்காது, ஆத்திரத்தை அகற்றி, கண்ணியத்தைக் கைப்பிடித்து, கட்டுப்பாட்டைப் பேணிக்காத்து, கடமையைத் திறம்பட ஆற்றி, வெற்றி வாகைசூடிய நங்கவரம் உழவர்பெருமக்களைப் பாராட்டுகிறோம். அவர்கள் வாழ்வு வளம் பெருக என வாழ்த்துகிறோம்.

இவ்வெற்றிற்கு உறுதுணையாக இருந்த உழவர் முன்னேற்றச் சங்க நண்பர்களையும், சட்டமன்ற உறுப்பினரையும், அவர்கள் புரிந்துள்ள நற்பணிக்காகப் பாராட்டுகின்றோம்.

## ரஷ்யாவுக்கு அடிபணியும் நிலைக்கு எதிர்ப்பு!

### அமெரிக்க பொதுவுடைமைக் கட்சி கரைகிறது

நியூயார்க், செப். 13—

அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியும், அதன் பத்திரிகையான 'டெய்லி ஒர்க்கர்' இதழும் மாஸ்கோவின் கருவிகளாக இன்னும் தொடர்ந்தாற்போல் காரியமாற்றி வருவதைக் கண்டித்து, அந்த இதழின் வெளிநாட்டு விவகார ஆசிரியர் ஜோசப் கிளார்க், கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்தும், பத்திரிகையில்தான் பொறுப்பேற்றிருந்த பதவியிலிருந்தும் விலகிக்கொண்டுவிட்டார்.

அவர் 28 ஆண்டுகளாக அந்தப் பதவியை வகித்துவந்தவர்.

அவர் தனது பதவி விலகல் மடலில், அமெரிக்கக்கம்யூனிஸ்டுக் கட்சி சுதந்திரக் கொள்கையை, அங்கேரியில் ரஷ்யா இழைத்த அநீதிக்குப் பிறகு மாற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தற்போது அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து 7,000 பேர் விலகிக்கொண்டுள்ளனர் என்றும், இப்போது மொத்தம் 10,000 பேர்கூட அமெரிக்காவில் கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினர்களாக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மக்கள் சபை ஒத்திவைப்பு

மக்கள் சபைக் கூட்டம் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது; மீண்டும் நவம்பர் 11-ம் தேதி கூட்டப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 'கேரளத்தை அவதூறு செய்யும் முணுமுணுப்பைக்கூட அனுமதியாதீர்'

### 'மாநிலத்திற்குவெளியிலுள்ள மலையாளிகளுக்கு ஆதரவு நல்குவோம்'

### கேரள சட்ட மந்திரி கிருஷ்ண அய்யர் பேச்சு

**"கேரளத்திற்கு வெளியில் பல்வேறு மாநிலங்களிலும் வாழும் ஒவ்வொரு மலையாளிக்கும் கேரள சர்க்கார் ஆதரவு தரும்"**

என்று, கேரள சட்ட மந்திரி கிருஷ்ணய்யர், சென்னை கேரள சமாஜத்தினர் கடந்த வாரத்தில் சென்னையில் நடத்திய மலையாளிகள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது :—

"கேரளத்தையும், கேரள மக்களையும் பற்றி எழுகிற தவறான எண்ணங்களையும், பொய்யான வதந்திகளையும், கேரளத்திற்கு வெளியில் உள்ள மலையாளிகள், நீக்குவதற்கு முன்வர வேண்டும்.

"வெளியில் உள்ள மலையாளிகள்தான், கேரளத்தின் கலாச்சாரத் தூதுவர்கள்; அவர்கள், கேரள மாநிலத்தைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ, அவதூறாக யாரும் முணுமுணுப்பதைக்கூட அனுமதிக்கக்கூடாது.

"மாநிலத்திற்கு வெளியே இந்தியாவெங்கணும் — இந்தியாவிற்கு வெளியிலும்கூட தங்களின் எண்ணற்ற சகோதரர்கள் வாழுகின்றனர் என்பது ஒவ்வொரு மலையாளிக்கும் பெருமைதரும் விஷயமாகும்.

"வெளியில் வாழ்கிற மலையாளிகள், ஆங்காங்கே வாழும் மக்களுடன் சுமூகமான உறவுகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பதுடன், தாங்கள் வாழும் பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கும் பாடுபடுகிறார்கள் என்பதும் பெருமை தரக்கூடியதாகும். ஆனால், அதே நேரத்தில் இந்த மலையாளிகள், கேரளத்தின் நலனையும் கருத்தில் கொள்ளவேண்டும். கேரளத்தின் முன்னேற்றம், அபிவிருத்தி, நற்பெயர், நல்ல பாரம்பரியங்கள், கலாச்சாரம் இவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

அதே மாநாட்டில் பேசிய கேரள கல்வி மந்திரி ஜோசப் முண்டசேரி நகரில் உள்ள மலையாளிகளின் நலனுக்காகப் பாடுபடுவதற்கென ஒரு 'மலையாள டிரஸ்ட்' நிறுவவேண்டும் என யோசனை தெரிவித்திருக்கிறார்.

மேலும் பேசிய அவர் குறிப்பிட்டதாவது :—

"சனநாயகத்தின் வெற்றி தோல்விகளை ஒரு சர்க்கார், அதன் சிறுபான்மையினருக்குத் தரும் பாதுகாப்பினைக்கொண்டுதான் நிர்ணயிக்க முடியும். எங்கள் சர்க்காரைப் பொறுத்தமட்டில் நாங்கள், எங்கள் மாநிலத்திலிருக்கும் சிறுபான்மையினருக்கு எல்லா வசதிகளையும் செய்து தந்திருக்கிறோம். பாலக்காட்டில் உள்ள தமிழர்கள், தமிழைப் போதனா மொழியாகக்கொண்ட ஒரு பள்ளிக்கூடம் வேண்டுமென விழைந்தால் நிச்சயம் சர்க்கார் அவர்களுக்கு உதவும். ஏற்கனவே நாங்கள், கன்னடம் பேசும் மக்களுக்காக காசர்கோடில் ஒரு கல்லூரியைத் துவக்கியுள்ளோம்.

"மேலும் தேவிகுளத்திலிருந்து சட்டசபைக்கு வந்துள்ள ஒரே தமிழ் உறுப்பினருக்காக அலுவலகம் சம்பந்தப்பட்ட கடிதங்களையும், தஸ்தாவேசுகளையும் அவருக்கு தமிழிலேயே வழங்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்."

## கேரளத்தில் ஏழைகளுக்கு நிலம்

திருவனந்தபுரம், செப் 14—

அரசாங்கத்திற்கு இப்போது உபயோகமில்லாத நிலங்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ள 7 இலட்சம் ஏக்கர் நிலத்தை ஏழைகளுக்கு வழங்க கேரள அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதாம்.

இதில் 25 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பின்னர், அரசாங்கம் அவசியம் என்று கருதினால் நிலத்தைத் திரும்பத் தந்துவிட வேண்டுமாம்.

சாதாரண நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ. 10-ம் நஞ்சை நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ. 50 வீதமும் வசூலிக்கப்படுமாம்.

10 ஆண்டுத்தவணையில் இந்தத் தொகையைச் செலுத்த வேண்டுமாம். இடையில் நிலத்தை விற்கவோ, குத்தகைக்குவிடவோ, அடமானம் செய்யவோ உரிமை கிடையாது என்றும் நிபந்தனைகள் கூறுகின்றன.

## சர்க்கரைத் தொழில்

### அரசாங்கம் ஏற்று நடத்தாததற்கு காரணம்?

நாட்டில் சர்க்கரைத் தொழிலை அரசாங்கம் ஏற்று நடத்துவதானால் மொத்தம் ரூ. 150 கோடி தேவைப்படுகிறதாம், எனவே அரசாங்கம், சர்க்கரைத் தொழிலை ஏற்று நடத்தவிரும்பவில்லையென்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## 'ஓரவஞ்சனை'க்கு சப்பைக்கட்டு!

"சென்னை, கேரளம், மைசூர், ஆந்திரம் ஆகிய நான்கு தென் மாநிலங்களில் உணவுத் தானிய விலைகள் குறைந்துவருகிறது" என்று மக்கள் சபையில் உணவு அமைச்சர் ஜெயின் கூறியுள்ளார்.

தென் மண்டலத்தில் குறுவைப் பயிர் அறுவடையானதும், தென் மாநிலங்களுக்கு அரசாங்க அரிசியே தேவைப்படாதாம்.

இனி ஆந்திரத்தில் உள்ள உபரி அரிசி தென் மண்டலத்திற்குள் நடமாடவேண்டி இருப்பதால், முறையாக தென் மண்டலத்திற்கு வெளியே—குறிப்பாக கல்கத்தா, பம்பாய், சௌராஷ்டிரா முதலிய இடங்களுக்கு—இது வரை சென்றதுபோல இனியும் ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி செல்ல வழியில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மத்திய அரசாங்கக் கிடங்குகளுக்கு அரிசி அதிகம் தேவைப்படுகிறதாம்; இந்த காரணத்தினால், தென் மாநிலங்களில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசியை நிறுத்திவிட்டதாம், மத்தியப் பேராசு!

## தெரிந்து கொள்ளுங்கள்!

1857 சுதந்தரப் போராட்ட இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்ட தியாகிகளின் சந்ததியார்களுக்கு, 'பென்ஷன்' தொகையாக இந்திய சர்க்கார், ஆண்டுதோறும் 8 பேருக்கு மொத்தம் ரூ. 16,150 விநியோகித்து வருகின்றனர்; தனிப்பட்ட நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உச்சத் தொகை ரூ. 500-ம் குறைந்தத் தொகை ரூ. 50ம்வழங்கப்படுகிறது' என்று மாநிலங்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

# ‘சென்றவிடமெல்லாம் நம் கொள்கையைப் பரப்பிய தீரர்’

## ‘இறுதிவரை தி. மு. க. வளர்ச்சியில் நாட்டம் கொண்டு உழைத்தவர்’

### கலைவாணர் பணிகள்குறித்து நடிகமணி நாராயணசாமி

கடந்த 6—9—57-ல் சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற கலைவாணர் என். எஸ். கே. இரங்கற்கூட்டத்தில் பேசிய நடிகமணி டி. வி. நாராயணசாமி குறிப்பிட்டதாவது :—

“கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், தன் கொள்கையை எந்த இடத்திலும் அச்சமின்றி எடுத்துக் கூறக்கூடியவர். எங்கெந்த இடத்தில் நமது இயக்கக் கருத்துக்கள் புகமுடியாதோ அங்கெல்லாம் அவர் அதைப் புகுத்திவந்தார்.

1947-ம் ஆண்டில், இந்திய சுதந்திரவிழாவின்போது நடந்த அனைத்திந்திய வானொலி நிகழ்ச்சியில் நம் கலைவாணரின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. அப்பொழுது நம் கலைவாணர் அவர்கள், இந்திய சுதந்திர வெற்றியைப் பாராட்டும் வேளையில் நம் இலட்சியத்தையும் வானொலியில் புகுத்தினார்; ‘திராவிடம் வாழ்க’ என்று வாழ்த்தி, திராவிடத் தலைவர்களுக்கும் புகழ்மாலை சூட்டினார். அரசாங்க நிலையமான வானொலி நிலையத்தில் ‘திராவிடம்’ என்ற வார்த்தையைத் தைரியமாகப் புகுத்த வேறு எவருக்கும் துணிவு வராது; கலைவாணர் அவர்களால் திராவிட இயக்கம் பெற்றுள்ள இலாபம் கொஞ்சநஞ்சமல்ல.

1944-ம் ஆண்டில், ஈரோட்டில் தமிழ்நாடு நாடகக் கலை மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் பேசிய கலைவாணர் அவர்கள், நாடகக் கம்பெனி முதலாளிகள் நடிகர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டுமென்னும் கருத்தை முதன்முதல் தைரியமாக எடுத்துச்சொல்லி வீர முழக்கம் செய்தார். அப்பொழுது அங்கு வீற்றிருந்த நாடகக் கம்பெனி முதலாளியான திரு. டி. கே. சண்முகம் அவர்களின் எதிரிலேயே அவர் இப்படிப் பேசினார். திரு. சண்முகம் அவர்களின் மனம் புண்பட்டுவிடுமோ என்று அவர் சிறிதும் அஞ்சினாரில்லை. அவரது பேச்சைக் கேட்ட என் போன்ற நடிகர்களெல்லாம் குதூகலமடைந்தோம்.

நான் அண்ணா அவர்களுடன் தொடர்புகொண்டு, முற்போக்கு உணர்ச்சி கொண்டவனாக இருந்த காரணத்தினால் தொடர்ந்து நாடகக் கம்பெனியில் வேலை பார்க்க முடியவில்லை. கடைசியில் அண்ணாவின் பக்கத்திலேயே வந்து சேர்ந்துவிட்டேன். அண்ணா அவர்கள், கலையுலக நாராயணசாமி அரசியல்வாதியாவதைவிட கலையுலகில் இருப்பதே நல்லது என்று கருதினார். என்னை அழைத்துச்சென்று கலைவாணர் அவர்களிடம் ஒப்படைத்தார். “நாராயணசாமியை எப்படியாவது முன்னுக்குக் கொண்டுவருவது இனி உங்கள் பொறுப்பு” என்று என். எஸ். கே. அவர்களிடம் அண்ணா கூறினார். கலைவாணர் அவர்களும் என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். ஆனால் நான் சற்றுத் தயங்கினேன். கலைவாணர் அவர்கள் என்னைப் பார்த்து ‘தயங்காதே தம்பி’ என்று கூறி அந்த அடியை வைத்து ஒரு பாடலாகவே பாடி என்னை மகிழ்வித்தார்.

அன்றுமுதல் கலைவாணர் ஆதரவிலே இருக்கலானேன். என் வாழ்விலே ஒரு திருப்பம் ஏற்பட்டது.

என்னையும், நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களையும் கொண்டு, நல்ல பல நாடகங்களை உருவாக்கி, தமிழ்நாடு பூராவும் நடத்துவது எனத் திட்டமிட்டிருந்தார் கலைவாணர். அதன்படி சென்னையில் என். எஸ். கே. நாடகக் குழுவின் சார்பில் நாடகங்கள் நடத்தப்பட்டன. அந்த நேரத்தில்தான் நம்கலைவாணர் ‘கொலையாளி’ என்று குற்றஞ்சாட்டப்பட்டுக் கொடுமைக்குள்ளாக நேர்ந்தது. அந்தத் துர்ப்பாக்கியமான சம்பவத்தால் நானும், கே. ஆர். ஆர். அவர்களும் கம்பெனியிலிருந்து வெளியேற நேரிட்டது.

கலைவாணர் அவர்கள் இறுதி நேரம்வரை நம் கழக வளர்ச்சியில் அக்கறைக்கொண்டிருந்தார். தேர்தல் நேரத்தில், ஒருநாளைக்கு 2, 3 கூட்டங்கள்—கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நம் கழக வெற்றிக்காகப் பாடுபட்டார். இறுதியாக அண்ணா படத்தைத் திறந்துவைத்துவிட்டே இறந்திருக்கிறார். அவர் மக்கள் தொண்டிலே சிறந்து விளங்கினார்; மக்கள் தலைவராகத் திகழ்ந்தார்.

எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்தார். நாங்கள் நல்ல நிலைமையை எய்தும் நேரத்தில் எங்களுக்கெல்லாம் வாழ்த்துக்கூற அவர் இல்லையே என்பதை நினைக்கும்போதுதான் நெஞ்சம் கலங்குகிறது.

கலைவாணர் அவர்கள் கலை உலகோடு மட்டும் தொடர்பு கொண்டவரல்லர்; பொது மக்களோடு தொடர்பு கொண்டு பணியாற்றினார்; ‘கலை கலைக்காகவே’ என்று வரட்டுத் தத்துவம் பேசாமல், ‘கலை, மனிதனைச்செம்மைப்படுத்த வேண்டும்’ என்ற உன்னத நோக்கத்துக்காக உழைத்தார். சமுதாயத்திலே அழியாத புகழைச் சம்பாதித்து விட்டார்; வரலாற்றிலே தனக்கு ஓர் தனி இடத்தை ஏற்படுத்திக் கொண்டு விட்டார். அவர் இடத்தை எட்டிப் பிடிக்க எவராலும் முடியாது. அவர் சேவைகளை நினைத்து அவர் பணியை நாம் தொடர்ந்து செய்வோமாக.”

# சென்னை பெத்துநாயக்கன்பேட்டை மக்கள் மன்ற ஆண்டுவிழா

## இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் கலந்துகொண்டனர்

சென்னை, செப். 10—

சென்னை — பெத்துநாயக்கன் பேட்டை மக்கள் மன்றத்தின் இரண்டாம் ஆண்டு விழா திருப்பள்ளித் தெருவில், 2—9—57 மாலை மிகச் சிறப்புறக் கொண்டாடப்பெற்றது. அன்று பேட்டையின் முக்கிய இடங்களிலெல்லாம் தோரணங்களும், வரவேற்புத் தட்டிகளும் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்தன. மாலை 4½ மணியிலிருந்து 7 மணிவரை டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி குழுவினரின் நாதசுர நிகழ்ச்சி நடைபெற்றது.

பிறகு மன்றத் தலைவர் சி. எஸ். கணேசன் தலைமையில் பொதுக் கூட்டம் துவங்கியது. செயலாளர் தோழர் சந்திரசேகரன் வரவேற்புரை கூறினார்.

தலைவர் தம் உரையில், பெத்துநாயக்கன்பேட்டை தன்மான இயக்கத்தின் கோட்டை என்பதைக் குறிப்பிட்டு, முன்பு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு இப்பேட்டை அளித்த மகத்தான ஆதரவைப் பற்றிக் கூறி, இன்றைய அரசியல் நிலையையும், மக்கள் மன்றத்தின் கடமையையும் விளக்கினார்.

தென்னாட்டின் விடுதலைக்கும், சமுதாய மறுமலர்ச்சிக்கும் பாடுபடும் ஒரே மாபெரும் இயக்கமான திமு.கழகத்துக்குஇம்மன்றம்ஆதரவாக நின்று பாடுபட்டு வருவதையும், இனியும் அது ஆதரவளித்து வரும் என்றும் தலைவர் கூறினார்.

விழாவைத் துவக்கிவைத்த நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் வி. முனுசாமி அவர்கள் பேசுகையில், ஆளும் கட்சியின் தவறான போக்குகளை எடுத்துக் கூறித் திருத்த வேண்டிய பணி மக்கள் மன்றத்தைச் சாருமென்றும், தென்னாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு இம்மன்றம் தன்னாலான உதவியைச் செய்யுமெனத் தான் நம்புவதாகவும், மக்கள் எண்ணத்திற்கு மாறாக நடக்கும் எந்த சர்க்காரும்—அது எவ்வளவு சக்தி படைத்ததாக இருந்தாலும் மக்கள் சக்தியால் அது மாற்றியமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டுவிட்டு, சென்னை நகர சபையின் பண விரய நடவடிக்கைகளை விளக்கிக் கண்டித்தார்.

பின்னர் செயலாளர் மன்றத்தின் ஆண்டறிக்கையைப் படித்தார்.

அடுத்து, தோழர் வி. எஸ். கோவிந்தராசன் பேசுகையில், மக்கள் மன்றத்தினரின் அரிய தொண்டுகளைப் பாராட்டிவிட்டு, இன்றைய ஆட்சியாளரின் போக்கை விளக்கினார். தி. மு. கழகத்தைப் பற்றித் தூற்றித் திரியும் ஒரு சில காங்கிரஸ் ‘பெரிய தலை’களின் பரிதாப நிலையை எடுத்துக் காட்டி, அவர்கள் கூற்றுக்கு மறுப்புரைத்தார்.

பின்னர் தி.மு.கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் இன்றைய அரசியல் நிலையை விளக்கிப் பேசினார். (பேசசு பின்னர் வரும்)

இறுதியாக தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அரியதோர் உரை நிகழ்த்தினார். (பேச்சு முன்னரே வெளியிடப்பட்டிருக்கிறது)

கூட்டத்தில், ஒரு பெண் குழந்தைக்கு ‘பூங்கொடி’ என்று பொதுச் செயலாளரால் பெயரிடப்பட்டதன் நினைவாக, சேலம் தேர்தல் வழக்கு நிதிக்கு ஒரு ரூபாய் அளிக்கப்பட்டது.

மக்கள் மன்றத்தின் சார்பாக, சேலம் வழக்கு நிதிக்கு, திரு. நெடுஞ்செழியன் அவர்களிடம் ரூ. 25 அளிக்கப்பட்டது.

விழா வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென வாழ்த்தி, தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கே. இராமதாஸ், மற்றும் பலரிடமிருந்துவந்த வாழ்த்துச் செய்திகள் கூட்டத்தில் படிக்கப்பட்டன.

# திருவள்ளூர் நகர வாசிகள் கவனிக்க!

“திருவள்ளூர் நகரத் தி. மு. கழகத்தில் சேராத சிலர், கழக சட்ட திட்டங்களுக்கு மாறாகத் தங்களைக் கழகத் தோழர்கள் என்று சொல்லிக்கொண்டு நகரத்தில் பல இடங்களில் உறுப்பினர் சேர்ப்பதாகச் சொல்லிப் பணவசூல் போன்ற காரியங்களில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

“மேற்படிதோழர்களிடம்கழகசம்பந்தமானஎத்தகைய தொடர்பு வைத்துக்கொள்ளுவதும், நகரக் கிளையின் அனுமதி பெற்றதாகாது என்பதை திருவள்ளூர் நகரப் பொதுமக்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்,”

என, திருவள்ளூர் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எத்திராசன் அறிவிக்கிறார்.

# நதி வழி எண்ணெய்ப் போக்குவரத்து

## நிபுணர் கருத்தறிய தூதுக்குழு ஐரோப்பா செல்லும்

புதுடில்லி, செப். 13—

நாகர்சாதியா பிரதேசத்திலிருந்து சுத்திகரிக்கப்படாத எண்ணெயை,பிரம்மபுத்திரா வழியாக கௌஹாதிக்குக் கொண்டுவர முடியுமா என்பதை, நிபுணர்களைக் கேட்டுத் தெரிந்துவருவதற்காக சர்க்கார் தூதுக்குழு ஒன்று சீக்கிரமே இங்கிருந்து ஐரோப்பா செல்லும் என்று தெரியவருகிறது.

கௌஹாத்தியிலிருந்து பீகாருக்கு, ஒரு பல நோக்கு குழாய் வழி அமைப்பது பற்றியும் குழுவினர் கேட்டறிந்து வருவார்களாம்.

# வட சென்னைத் தேர்தல் வழக்கு நிதியளிப்புக் கூட்டம்

## என்.வி. நடராசன், என்.சீவரத்தினம் கலந்துகொண்டனர்

சென்னை, செப். 10—

சென்னை-இராயபுரம் மீனாட்சியம்மன்பேட்டை வாசிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வட சென்னை தேர்தல் வழக்கு நிதியளிப்புக் கூட்டம் 8-9-57 மாலை 6-30 மணிக்கு தோழர் டி. எஸ். வேலன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் இராதாமாணிக்கம், சேலம்-சீனிவாசன் ஆகியோர் இன்னிசை வழங்கினர்.

தலைவர் தம் முன்னுரையில் இக்கூட்டத்தின் நோக்கத்தை விளக்கினார்.

பிறகு தோழர் அன்புரோஸ் சிறிதுநேரம் பேசினார்; அவர் பேசுகையில், வடநாட்டு ஆதிக்கத்தைக் கண்டித்ததுடன், சுதந்தரப் போர் நூற்றாண்டு விழாவில் தி. மு. கழகம் ஏன் கலந்துகொள்ளவில்லை என்று கேட்கும் கம்யூனிஸ்டுகளுக்குத் தக்கவகையில் பதிலளித்தார்.

சிறுவன் லிங்கராஜ் சிறிது நேரம் பேசினான்.

அடுத்து தோழர் என். சீவரத்தினம் அவர்கள் பேசுகையில், தேர்தலுக்குப் பிறகு தி. மு. கழகம் மேலும் அமோக செல்வாக்குப் பெற்று வளர்ந்தோங்கிவருகிறது என்றும், ஏழைமக்களைப் பாதிக்கும் வகையில் 113 வரிகளைப் போட்ட காங்கிரஸ் சர்க்காரை காங்கிரஸ்காரர்களே வெறுக்கிறார்கள் என்றும், வடவர் தென்னாட்டை ஒரு சந்தைக்கடையாகவே வைத்திருக்கின்றனர் என்றும், ‘சுதந்தரப் பயணம்’ என்ற திரைப்படத்தில் தென்னாட்டைப் புறக்கணித்த வடநாட்டின் வக்கிரப்புத்தியைக் கண்டித்தும், பல எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிப் பேசினார்.

இறுதியாக, தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கியும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும் நீண்டநேரம் கருத்து விளக்கச் சொற்பொழிவாற்றினார். (பேச்சு பின்னர் வரும்)

மீனாட்சியம்மன்பேட்டை வாசிகள் சார்பில் தேர்தல் வழக்கு நிதியாகக் கொடுக்கப்பட்ட ரூ. 27-ஐ துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், தோழர் என். சீவரத்தினம் அவர்களிடம் அளித்தார்.

நன்றிகூறலுடன் கூட்டம் [illegible] வு 9 மணிக்கு முடிவுற்றது.

# ‘வாருங்கள்! முதலீடு செய்யுங்கள்’

## சகாக்களை வருந்தி அழைக்கிறார் ஜி. டி. பிர்லா

நியூயார்க், செப். 11 |

“இந்தியாவில் கடந்த மூன்றாண்டுகளில் தனியார் துறையில் 1·7 கோடி டாலர்வரை முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவின் பொருளாதாரம் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதற்கான அறிகுறி இது என்பதை அன்னிய மூலதனக்காரர்கள்உணரவேண்டும். முதலீடு செய்வதற்கு இந்தியா ஒரு நல்ல நாடாகும்” என்று, இந்தியத் தொழிலதிபர் தூதுக்குழுத் தலைவரான ஜி. டி. பிர்லா இங்கு நடைபெற்ற விருந்தொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் குழுவினர், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்வர்,

மேலும் பேசிய அவர், இயந்திர சாதனங்கள், இயந்திரங்கள் முதலியன வாங்குவதற்காக இந்தியா அன்னியச் செலாவணியை உபயோகிப்பது தவறு அல்ல என்றும், அதுகண்டு கவலைப்படத் தேவை இல்லை என்றும், இப்போதைய இந்தியாவின் நிலை அபிவிருத்தி நெருக்கடியே என்றும் குறிப்பிட்டாராம்.

# அஞ்சல் மூலம் வாக்குப் பதிவு

## சென்னை சர்க்கார் அறிவிப்பு

சென்னை, செப். 13—

எதிர்காலத்தில் அஞ்சல் மூலம் வாக்குப் பதிவு செய்ய நிர்ணயிக்கப்படும் நாள், அஞ்சல் விடுமுறை நாளாக இருக்கக்கூடாது என்று சென்னை அரசாங்கம் அறிவித்துள்ளது.

# தி. மு. கழகத்துக்கு வெற்றியளித்த 15 தொகுதி மக்களுக்கும் பாராட்டு

## ஈப்போ தோழர்கள் விழா நடத்தினர்

கடந்த 23—6—57 மாலை 4-30 மணிக்கு ஈப்போ ‘பெடரல் முஸ்லிம் ரெஸ்டாரெண்ட்’டில் தோழர் சா. சி. சுப்பையா அவர்கள் தலைமையில் ‘மக்களைப் பாராட்டும்’ விழா நடைபெற்றது.

தோழர் ம. செ. முத்துமாறன் வரவேற்புரையாற்றினார்.

அண்ணா உட்பட, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் 15 பேர்களையும் மக்கள் நலங்கருதித் தேர்ந்தெடுத்து, சட்டமன்றத்துக்கு அனுப்பிய 15 தொகுதி மக்களையும் பாராட்டி, தோழர்கள் லெ. க. தங்கவேலு, நீ. சிவநாதன், அ. இராமநாதன், தொ. கண்ணுச்சாமி ஆகியோர் பேசினர்.

இவ்விழா, தோழர் இராமநாதன் முயற்சியினால் நடைபெற்றது.

தேநீர் விருந்துச் செலவு [illegible] மீதித் தொகையான 2 ரூபா[illegible] 81 காசுகளை ‘நம் நா[illegible] வளர்[illegible] ாக அளிக்க [illegible] செய்து [illegible]

தோழர் [illegible] ம நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

# முதுகுளத்தூர்வட்டத்தில்படுகொலைகள்

## தூவல் கிராம துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஐவர் பலி

### தாழ்த்தப்பட்டோர்—சாதி இந்துக்களிடையே உறவுகள் சீர்குலைவு

பரமக்குடி, செப். 14—

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டம் கீழத்தூவல் என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம்பற்றி விசாரணை நடத்த, ரெவின்யூ போர்டு உறுப்பினர், வெங்கடேஸ்வரனை சர்க்கார் நியமித்திருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில், கொலை வழக்கு சம்பந்தமாக சில நபர்களைத் தேடி அக்கிராமத்திற்குச் சென்ற போலீசாரை, கிராமத்திற்குள் நுழைய விட மறுத்த ஆயிரம் பேரடங்கிய கூட்டம் ஒன்றின்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக ஐந்து பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்தச் செய்தியை, சர்க்கார் அறிக்கையும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

சம்பவத்திற்கு முன்னுள், எம்மானுவல் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், பரமக்குடி பஸ் நிலையத்தில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இவரது கொலையை ஒட்டியே போலீசார் சில நபர்களைத் தேடி, தூவல் கிராமத்திற்குச் சென்றிருக்கின்றனர்.

### 107 வீடுகள் தீக்கிரை

இந்தத்தூவல் கிராமத்திற்கு அருகில் உள்ள அருங்குளம் என்ற மற்றொரு கிராமத்தில், துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்திற்கு முதல்நாள், சுமார் 107 வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுச் சாம்பலாக்கப்பட்டிருக்கின்றன. இந்த சம்பவத்தின்போது படுகாயப்பட்ட இருபெண்கள் இராமநாதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இந்தத் தீவைத்தலுக்குமுன் நடைபெற்ற சம்பவம் ஒன்றில் 10 பேர்வரை கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

முதுகுளத்தூர் தொகுதியில் அண்மையில் நடைபெற்ற உபதேர்தலுக்குப்பின், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், சாதி இந்துக்களுக்குமிடையே உறவுகள் கெடுபிடியாக இருந்து வருவதாகவும், அவற்றின் விளைவாகவே இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது.

## மதுரை கழகத் தோழர்கள் மீது வழக்கு

### செப். 21-ந் தேதி விசாரணை

மதுரை, செப். 12—

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் உட்பட கழகத் தோழர்கள் 11 பேர் மீது தொடரப்பட்டுள்ள ஜாமீன் வழக்கு ஆர். டி. ஒ. கோர்ட்டில் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டு, இம்மாதம் 21-ந் தேதிக்கு வாய்தா போடப்பட்டுள்ளது; 21-ந் தேதி மேலூரில் இவ்வழக்கு விசாரணை நடைபெறும்.

கழகத் தோழர்கள் சார்பில் வழக்கறிஞர்கள் தர்மராஜ் சந்தோஷம், தாவூத், போத குருசாமி ஆகியோர் ஆசராயினர்.

## இலவச ஆரம்பக் கல்வி

### பஞ்சாப் சர்க்கார் அறிவிப்பு

சந்திகர், செப். 12—

வரும் அக்டோபர் முதல் பஞ்சாப் சர்க்கார், மாநிலத்தில், ஐந்தாம் வகுப்புவரை இலவசக் கல்வி தர முடிவு செய்திருக்கிறார்கள்.

உள் நிர்வாக மன்றங்களின் நிர்வாகத்திலிருந்து வரும் சுமார் 10,000 ஆரம்பப் பள்ளிகளை சர்க்கார், தேசீய மயமாக்கும் நடவடிக்கையுடன் இணைந்த இந்த உத்தரவினால், மாநிலமெங்கணுமுள்ள சர்க்கார் ஆரம்பப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்புவரை அனைவர்க்கும் இலவசக் கல்வி தரப்படும் என்று தெரியவருகிறது.

இதை சட்டசபையில் அறிவித்த கல்வி மந்திரி வித்தியாலங்கர், 'பள்ளி இறுதி வகுப்புவரை இலவசக் கல்வி தரவேண்டும் என்ற முதன் மந்திரியின ஆசை, சமீபகாலத்தில் நிறைவேற்றப்படக்கூடியது எனத் தான் நினைக்கவில்லை' என்றும் கூறியிருக்கிறார்.

## மூடுவதை தவிர வேறு வழியில்லையாம்!

சென்னை, செப். 13—

"மத்திய அரசாங்கம் தனது கிடங்குகளிலிருந்து அரிசி சப்ளை செய்வதை நிறுத்திவிட்டால் சென்னை அரசாங்கம் நியாய விலைக் கடைகளை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று, சென்னை சர்க்கார் சிவில் சப்ளை அதிகாரிகள் கருதுகின்றனராம்!

"அரிசியின் விலை குறைந்து விடவில்லை; நியாய விலைக் கடைகளை மூடுவது விலையைத் திடீரென உயர்த்தும்; மண்டலத்திற்குள் அரிசி கொள்முதல் செய்வது நடைமுறையில் இயலும் காரியமாகத் தோன்றவில்லை; ஆந்திரத்தில் உபரி அரிசியைக் கொள்முதல் செய்வதானாலும்கூட அங்கு விலை அதிகமாக உள்ளது'' என்றும் அவர்கள் கருத்தறிவித்துள்ளனர்.

## வரிகள் மூலம் கிடைத்தது ரூ. 632 கோடி!

'முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குச் செலவான 1,960 கோடி ரூபாயில், வரிகள் மூலமாகவும் இரயில்வே மிகுதி (உபரி) மூ...ாகவும் கிடைக்கப்பெற்ற ரூ. ...'காடியில் ரூ. 120 கோடி இ... ...'வக்களிலிருந்தும், ரூ. ...32 ...கோடி மத்திய மாநில ...சார் ...ன் நடைமுதல் ...மான ...கிடைத் தன... ...ன்று மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

## கழகக் கூட்டங்கள்

★

**புதுக்கோட்டை :**
திலகர் திடலில்
18—9—57 இரவு 8 மணிக்கு
தலைவர் :
சின்னராசாதங்கவடிவேல்
பேசுபவர் :
அண்ணு

★

சென்னை — சிந்தாதிரிப்பேட்டை :
கலவச் செட்டித் தெருவில்
(திராவிட நாடு விடுதலை வாரம்)
17—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : தி. மணிவண்ணன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
கண்ணதாசன்

★

**களக்காடு :**
18—9—57 மாலை 6-30 மணிக்கு
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
டி. ஆர். சுப்பிரமணியம்

திராவிடநாடு 'விடுதலை வார'

## இன்னிசை விருந்து

17-9-57 இரவு 8-மணிக்கு சென்னை-அண்ணு பிள்ளைத் தெரு (கொத்தவால்சாவடி அருகில்) சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் வி. முனுசாமி அவர்கள் தலைமையில்சேலம்-சீனிவாசன் குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெறும்,

## திராவிடநாடு விடுதலை வாரக் கூட்டங்கள்

17—9—57 மாலை 6 மணிக்கு சென்னை - தண்டையார்பேட்டை கே. வி. கே. சாமி படிப்பகத்தில் தோழர் டி. பி. சுந்தரம் தலைமையில் தோழர்கள் என். சிவரத்தினம், வே. கபிலன், தமிழன்னல், சௌந்திரபாண்டியன், த. கணேசன், அ. கோ. பெருமாள், ஏ. எல். இராசு ஆகியோர் பேசுவர்.

**வியாசர்பாடி :**

17—9—57 மாலை 6 மணிக்கு சென்னை-வியாசர்பாடி சுந்தர முதலித் தெருவில், திராவிடநாடு விடுதலை வார விழாவும், உதயசூரியன் படிப்பகத் துவக்க விழாவும் தோழர் எஸ். சி. சிட்டிபாபு தலைமையில் நடைபெறும். தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், டி. கே. சீனிவாசன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண் : 8/57

# திராவிட நாடு விடுதலை வாரம்

## செப்டம்பர் 17-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 9-வது ஆண்டு துவக்க நாளான 17—9—1957-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும் கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை—நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்தி நாட்டுப் பிரிவினைக்கான கருத்து விளக்கம் தருவதுடன், கழகப் போராட்டங்களில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்பன்,

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. க.

4—9—57
'அறிவகம்'
சென்னை-13

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# திராவிட நாடு விடுதலை வாரம்

**17—9—57 மாலை 6-மணிக்கு**
சைதாப்பேட்டை குயவர்வீதியில்

★

**தோழர் கோ. செங்குட்டுவன்**
தலைமையில்

பொதுச்செயலாளர்
**இரா. நெடுஞ்செழியன்**
**மு. கருணாநிதி**
பேசுவர்.

★

இசை : சேலம்-சீனிவாசன்

பொறுப்பு : 47-வதுவட்ட தி. மு. க. —சென்னை மாவட்ட தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## நெடுஞ்செழியன் உரிமை முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"அவர் தன் பெயரை மாற்றிக்கொண்டதைக்கண்டு, இந்த நாட்டிலுள்ள சில 'மாஞ்செடி கொடிகள்' அவரைக் கிண்டல் செய்தன; கேலி செய்தன. அந்தக் கிண்டலையும், கேலியையும் தூள்தூளாக்கினார் மறைமலையடிகள். அவர் எவருக்கும் வளைய மறுப்பவர். தன் கருத்தைக் கட்டிக்காக்க தக்க அரண் அமைத்துக்கொண்டார்; இறுதியில் வெற்றியும் பெற்றார்; என்றும்—எதிலும் தலைநிமிர்ந்தே நின்றார். தமிழ் நாட்டில் தமிழார்வம் பொங்கச் செய்தார். அவர் காட்டிய வழியில்தான் இன்றையப் புலவர் உலகம் செல்கிறது. 100-க்கு 99 பேர் அவரைப் பின்பற்றியே செல்கின்றனர்.

"அவர் அன்று ஊட்டிய உணர்ச்சிதான் சீரழிந்த தமிழகத்தைக் காப்பாற்றியது. பத்தாண்டுக்குமுன் இல்லாத நல்ல தமிழை இன்று நாம் காண்கின்றோம்.

"எதையும் தமிழால் சிந்தித்துத் தமிழிலே எழுதி, தமிழிலே பேசி, தமிழிலே ஆட்சி நடத்த வேண்டும் என்ற உணர்ச்சியூட்டியவர் அவர்தான்.

"பிறமொழியிலிருந்த என் பெயரைத் தூக்கி எறிந்துவிட்டு, நல்ல தமிழில் வேறு பெயரை வைத்துக் கொண்டேன். அப்பொழுது என்னைக் கேலி, கிண்டல் செய்தவர்கள் பலருண்டு. அப்பொழுதெல்லாம் மறைமலையடிகள் ஊட்டிய உணர்ச்சிதான் எனக்கு ஊக்கத்தையும், உறுதியையும் அளித்தது. அவர் அன்று விதைத்த விதை, பூத்துக் காய்த்துக் கனியாகி இன்று பலன் கிடைக்கும் நிலையில் உள்ளது."

திரு. நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் பேசுகையில், தமிழ் நாட்டில் எல்லாத் துறைகளிலும் தமிழ் ஆட்சி மொழியாக இயங்க முடியும் என்பதை எடுத்துக் காட்டி, கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் மொழியாகவும் தமிழ் விளங்க முடியும் என்பதை விளக்கினார்.

தமிழ் நாட்டவர் தமிழும், அதோடு ஆங்கிலமும் கற்றால் போதும் என்றும், பிறமொழி கற்கவேண்டிய அவசியம் இல்லையென்றும் பல ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார்.

பேராசிரியர்கள்சேதுப்பிள்ளை, மீனாட்சிசுந்தரனார், வரதராசனார் போன்ற அறிஞர்களைக்கொண்டு ஒரு குழு அமைத்து, தக்க சொற்களை அமைத்தால் விஞ்ஞான கலைத்துறைகளை தமிழ்மொழி மூலம் பயிற்றுவிக்க முடியும் என்று கருத்துத் தெரிவித்தார்.

(பேச்சின் முழு விவரம் அடுத்து வெளிவரும்)

## 'ரூ. 700 கோடி வெளி நாட்டு உதவிவேண்டும்'

### திட்ட அடிப்படை பற்றி நந்தா

புதுடில்லி, செப். 14—

"உலக பாங்கி, மற்றும் இந்தியாவுடன் நட்புறவு கொண்ட நாடுகள் குறைந்தது ரூ. 700 கோடி அளவுக்கு உதவி அளித்தால், திட்டத்தின் அடிப்படை இலக்குகளை நிறைவேற்ற வசதி ஏற்படும்"

என்று, மத்திய திட்ட அமைச்சர் நந்தா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் பெண் போலீசார்

### எழும்பூர், மத்திய இரயில் நிலையங்களில் நியமிக்கப்படலாம்

சென்னை, செப். 13—

சர்க்கார் முன்னுள்ள ஒரு யோசனை அங்கீகரிக்கப்படுமானால் இரயில்வே போலீசில் முதன் முதலாகப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று தெரிய வருகிறது.

மாவட்டப் போலீஸ் அதிகாரிகள் மாநாடு அண்மையில் உதகையில் நடைபெற்றபோது இது குறித்து விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இரயில்வே இலாகா உதவி இன்ஸ்பெக்டர்—ஜெனரல் எழும்பூர், சென்ட்ரல் இரயில் நிலையங்களில் பெண் போலீசாரை நியமிக்கலாம் என சர்க்காருக்குத் திட்டம் தந்திருக்கிறாராம்.

ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஐந்து, தலைமைப் போலீசார், 6 போலீசார் என 12 பேர்களை ஒவ்வொரு நிலையத்திலும் நியமிக்கலாம் என்று அவர் யோசனை தெரிவித்திருக்கிறார்.

இதர பெரிய இரயில் நிலையங்களிலும், நகரத்திலும் பெண் போலீசாரை நியமிப்பது பற்றி இந்த முதல் முயற்சியில் கிடைக்கும் அனுபவத்தை ஒட்டி பரிசீலிக்கலாம் என்றும் அவர் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறாராம்.

## சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டி மன்றம்

17-9-57 மாலை 6-30 மணிக்கு மேற்படி மன்றத்தில் சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் தலைமையில் டாக்டர் ஜே. டி. கார்கினிஸ் "பண்டை எகிப்தில் திராவிடர்கள்" என்பதுபற்றி ஆங்கிலத்தில் உரை நிகழ்த்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தூக்கார தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.